



# ஹர ஹர சங்கரா




FREE COPY
November - 2025
Vol. 5 - ISSUE 01


# KODAMBAKKAM TIMES

# தாமோதர மாதத்தின் சிறப்பும், தீபஆரத்தியின் பலனும்

இறைபக்திக்குரிய நான்கு மாதங்கள் என்றழைக்கப்படும் சாதுர் மாதங்களில் தாமோதர மாதம் சிறந்த மகிமைகள் பொருந்தியது ஆகும். சாதுர்மாத விரதம் என்பது மழைக்காலமான ஆடி மாத பௌர்ணமி முதல் கார்த்திகை மாத பௌர்ணமி வரை, கடைபிடிக்கப்படுவது. ஆடிப்பண்டிகை எனத் தொடங்கி இந்த காலத்தில் பல பண்டிகைகளும், விரதங்களும் மேற்கொண்டு இறை வழிப்பாட்டுடன் கொண்டாடும் வழக்கம் தொன்று தொட்டு நம் நாட்டில் இருந்து வருகிறது.

சாதுர் மாதங்களில் கடைசியானதும், சிறந்த மகிமைகள் பொருந்தியதுமான மாதம் தாமோதர மாதம் ஆகும். இறை வழிபாட்டுக்குரிய நான்கு சாதுர்மாதங்களில் இந்த மாதத்தை கார்த்திகை என்றழைப்பர். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தாயின் அன்பினால் கட்டுண்டதால் தாமோதரன் என்று அழைக்கப்படுகிறார்.

### தாமோதர மாதம் என்பதன் பொருள்?

தாமோதர என்றால் ஸ்ரீ கிருஷ்ணரை குறிக்கும். தாம என்றால் கயிறு, உதர என்றால் வயிறு, குறிப்பாக பகவான் ஸ்ரீகிருஷ்ணரை அன்னை யசோதா தேவி கயிற்றால் உரலில் கட்டிய நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் பொருட்டும், கிருஷ்ணரின் தூய பக்தை ஸ்ரீமதி ராதாராணியை வழிபடும் பொருட்டும் தாமோதரத் திருவிழா கொண்டாடப்படுகிறது.

பத்ம புராணம் "இம்மாதம் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானதாகும். இம்மாதத்தில் ஸ்ரீகிருஷ்ணருக்கு சிறிதளவு பக்திசேவை செய்தால் கூட கிருஷ்ணர் தன் திவ்யஸ்தலத்தையே அப்பக்தனுக்கு வழங்குவார்" என்று கூறுகிறது. அதே போல், "புண்ணிய மாதங்கள் அனைத்திலும் அதி புண்ணிய மாதம் தாமோதர மாதம்" என்று ஸ்கந்த புராணமும் இம்மாதத்தின் மகிமையை பலவாறு விவரிக்கிறது. அதேபோல் ஸ்ரீகிருஷ்ணனே கூறுகிறார் "இடங்களில் துவாரகையும், நாட்களில் ஏகாதசியும், இலைகளில் துளசியும், மாதங்களில் கார்த்திகையும் விருப்பமானவை" என்று.

### விழாக்கள் நிரம்பிய மாதம்

தீபாவளி, தாமோதர லீலை, ஸ்ரீலக்ஷ்மி பூஜை, பகுலாஷ்டமி, ஸ்ரீராதா குண்டம் உருவான நாள், துளசி சாளக்கிராம திருக்கல்யாணம், கோவர்த்தன கிரி பூஜை மற்றும் பல முக்கியமான விழாக்கள் இந்த மாதத்தில் தான் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### தீப ஆரத்தி வழிபாடு

பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு பிரியமான தாமோதர மாதத்தில் தீப ஆரத்தி காட்டுவதால் பலவிதமான நற்பலன்களை பெறலாம் என்று வேத சாஸ்திரங்கள்



கூறுகின்றன. தாமோதர மாதத்தில் துவாதசி நாட்களில் ஸ்ரீகிருஷ்ணரின் ஆலயத்தில் பகவானுக்கு தீப ஆரத்தி காட்டினால் நிலைத்த செல்வத்தையும், நல்ல குழந்தைகளையும், புகழையும், வெற்றியையும் பெற முடியும்.

யார் ஒருவர் தாமோதர மாதத்தில் லக்ஷ்மி தேவியின் கணவரான பகவான் விஷ்ணுவுக்கு தாமரை மலர்களை அர்பணித்து வழிபடுகிறாரோ அவர் இடத்தில் லக்ஷ்மி தேவி நூற்று கணக்கான பிறவிகள் தோறும் வீற்றிருக்கிறார்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு தினசரி நெய்விளக்கு காட்டுவதால் பல லட்சக்கணக்கான பிறவிகளில் செய்த பாவங்கள் முழுவதும் அழிகின்றன.

தாமோதர மாதத்தில் ஸ்ரீகிருஷ்ணருக்கு தீப ஆரத்தி காட்டும் ஒருவர்க்கு கொடுப்பதற்கு சமமான செல்வம் தன்னிடம் எதுவும் இல்லை எனக் கருதி அப்படிப்பட்ட பக்தருக்கு தன்னையே கொடுக்கிறார் பகவான் ஸ்ரீகிருஷ்ணர்.

இந்த தாமோதர மாதத்தில் எல்லா புண்ணிய நதிகளில் நீராடிய பலனையும், யாகங்கள் செய்த பலனையும் பெறுவதுடன், முன்னோர்களையும் நற்கதியடைய செய்யலாம் என பத்ம புராணம், ஸ்கந்த புராணம் கூறுகிறது.

# முக தரிசனம்



சிதம்பரம் நடராஜருக்கு வருடத்திற்கு இரண்டு முறைதான் இந்த அலங்காரம் செய்யப்படுகிறது. இந்த அலங்காரத்தில் முகத்தை மட்டுமே தரிசிக்க முடியும். ஒருவர் நடனமாடிக் கொண்டே இருந்தால் அவரின் முகத்தை சரியாக பார்க்க முடியாது. சதாசர்வ காலமும் நிற்காமல் நடனமாடும் நடராஜரின் முகத்தை அனைவரும் தரிசிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த அலங்காரமானது செய்யப்படுகிறது.

# ஐப்பசி பௌர்ணமி அன்னாபிஷேகம்



கருப்பையில் இருக்கும் ஜீவனுக்கும் கல்லினுள் இருக்கும் தேரைக்கும் உணவளிப்பவர் ஈசன். இந்த கலியுகத்தில் உணவு தான் உயிராக விளங்குகிறது. ஐப்பசி அன்னாபிஷேகம் பற்றி சாம வேதத்தில் ஒரு இடத்தில் "அஹமன்னம், அஹமன்னம், அஹமன்னதோ" என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு என்ன பொருள் என்றால் எங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருள் அன்னத்தின் வடிவில் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஏனென்றால் அரிசியின் வடிவம் நீள்வட்டமாகும். இது லிங்க வடிவை ஒத்துள்ளதாக இருக்கிறது. உலக

SREE MANGALAGURU JOTHIDA NILAYAM
'VAAZHVIL VELICHAM'
SURESH MADHAVAN
93609 45818
(With Appointment Whatsup Only)

வாழ்க்கைக்கு அச்சாணி அன்னம். அன்னம் பிரம்மா, விஷ்ணு, சிவ செரூபம். அம்மை பார்வதியும் உலக ஜீவராசிகளுக்கு படியளக்கும் அன்னபூரணியாகவேகாட்சி தருகின்றாள்.

இறைவனின் அருவுருவமான லிங்க மூர்த்திக்கு அன்னத்தால் அபிஷேகம் செய்து வழிபடும் நாளே ஐப்பசி மாத பௌர்ணமி அன்னாபிஷேக நாளாகும்.

அன்னாபிஷேகம் நடைபெறுவதற்கான புராண கதை ஒன்று உண்டு. தட்சனின் சாபத்தால் கலைகள் தேயக் கடவது என சாபம் பெற்ற சந்திரன் தன் கலைகள் தேய்ந்து இறுதியில் மூன்றாம் பிறைக்கு வரவும் சிவனை தஞ்சம் அடைய அவரும் அடைக்கலம் தந்து மூன்றாம் பிறையை தன் தலை மேல் சூடிக் கொண்டு உன் தவறை உணர்த்துவதற்காக இன்று முதல் உன் கலைகள் ஒவ்வொன்றும் தேயவும், பின் வளரவும் அருளினார். ஆனால் ஐப்பசி மாதப் பௌர்ணமி நாளில் மட்டும் பூரண கலைகளுடன் நீ மிளிர்வாய் என ஆசிகள் வழங்கினார். மிகுந்த ஒளியுடன் காட்சி தரும் ஐப்பசி பௌர்ணமி நாளில் தான் அன்னாபிஷேகம் நடைபெறுகின்றது.

பல தானியங்கள் இருக்கும் போது அன்னத்தால் மட்டும் ஏன் அபிஷேகம் நடைபெறுகிறது என நினைக்கலாம். அதற்கு காரணம் நவக்கிரகங்களில் சந்திரனுக்கு உரிய தானியம் அரிசி. எனவே அதைக் கொண்டே அன்னாபிஷேம் செய்கிறோம். மேலும் பஞ்ச பூதங்களை தன் வசத்தில் இயக்கும் ஈசனுக்கு அவைகளை கொண்டே சமைக்கப்பட்ட அன்னத்தை ஆகாயத்திலிருந்து தோன்றிய காற்றின் உதவியுடன் நெருப்பை மூட்டி, நிலத்திலிருந்து விளைந்த அரிசியினை நீரில் வேக வைத்து சாதமாக அதாவது அன்னமாக்கி அன்னாபிஷேகமாக செய்து மகிழ்கிறார்கள். அன்னாபிஷேகம் அன்று செய்யப்படும் ஒவ்வொரு சாதப் பருக்கையும் சிவலிங்கம் ஆகும். அன்று ஈசனை தரிசிப்பதால் கோடிலிங்க தரிசனம் செய்த பலன் கிடைக்கும் என சான்றோர்கள் கூறுகிறார்கள். இத்தகைய சிறப்புமிக்க நன்நாளில் ஆலயம் சென்று வழிபட்டு ஈசனின் அருளை பெறுவோம்.

தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி.

........ ஹேமலதா க்ருஷ்ணகுமார்

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**

**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com

# வேலனின் வேறு பெயர்களும் அதன் விளக்கமும்

**ஆறுமுகம் :** ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதம் என்ற ஐந்துடன் அதோமுகமும் சேர்ந்து ஆறுமுகமானது.

**குகன் :** குறிஞ்சி நிலத் தெய்வம், மலைக் குகைகளில் கோயில் கொண்டதால் குகன்.

**குமாரன் :** மிக உயர்ந்தவன், இளமையை எப்போதும் உடையவன், பிரம்மச்சாரி ஆனவன்.

**முருகன் :** முருகு, அழகு என்று பொருள் எனவே முருகன் ஒப்புமையற்ற பேரழகன்.

**குருபரன் :** கு-அஞ்ஞான இருள், ரு - நீக்குபவர், ஆன்மாக்களின் அறியாமை இருளை அகற்றுபவன். குரு சிவனுக்கும், அகத்தியருக்கும், அருணகிரிக்கும் குருவாய் நின்று பிரணவத்தை உபதேசிப்பவன் குருநாதன்.

**கார்த்திகேயன் :** கார்த்திகைப் பெண்களால் வளர்ந்தவன்.

**கந்தன் :** கந்து - யானை கட்டும் தறி. கந்தன் ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாய் இருப்பவன். பகைவர் வலிமையை அழிப்பவன் ஸ்கந்தன், தோள் வலிமை மிக்கவன். ஆறு திருமேனியும் ஒன்றானவன்.

**கடம்பன் :** கடம்ப மலர் மாலை அணிந்தவன்.

**சரவணபவன் :** சரம் - நாணல், வனம் - காடு, பவன் - தோன்றியவன், நாணல் மிக்க தண்ணீர் உடைய காட்டில் தோன்றியவன்.

**ஸ்வாமி :** ஸ்வம் - சொத்து, எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும் சொத்தாக உடையவன். சுவாமி என்ற பெயர் முருகனுக்கு மட்டுமே உரியது. சுவாமி உள்ள மலை சுவாமி மலை.

**சுரேஷன் :** தேவர் தலைவன் சுரேஷன்.

**செவ்வேல் :** செந்நிறமுடையவன், ஞானச் செம்மை உடையவன்.

**சேந்தன் :** செந்தழல் பிழம்பாய் இருப்பவன்.

**சேயோன் :** சேய் - குழந்தை. குழந்தை வடிவானவன்.

**விசாகன் :** விசாக நட்சத்திரத்தில் ஒளியாய் உதித்தவன்.

**வேலவன், வேலன் :** வெல்லும் வேல் உடையவன். அறிவாக, ஞான வடிவாக விளங்கும் வேல் கூர்மை, அகலம், ஆழம் என்னும் மூன்றும் உடையது.



**முத்தையன் :** பிறப்பிலேயே முத்து ஒளியுடையது. மற்ற மணிகள் பட்டை தீட்டினால் தான் ஒளிரும். எனவே இயல்பாகவே ஒளிர்பவன் முத்தையன்.

**சோமஸ்கந்தன் :** ச - உமா -ஸ்கந்தன் : சிவன் உமை முருகன், சத்து - சிவம், சித்து - உமை, ஆனந்தம் - கந்தன், முருகன் ஆனந்த வடிவானவன்.

**சுப்ரமணியன் :** சு - மேலான, பிரம்மம் - பெரிய பொருளிலிருந்து, நியம் தோன்றி ஒளிர்வது. மேலான பெரிய பிரம்மத்தில் இருந்து தோன்றி ஒளிர்பவன்.

**வள்ளற்பெருமான் :** முருகன் மண்ணுலகில் அவதரித்த வள்ளி இச்சா சக்தி மூலம் இக நலன்களையும், விண்ணுலக மங்கை தெய்வானை கிரியா சக்தி மூலம் பரலோக நலன்களையும், வேலன் மூலம் ஞானசக்தி ஆகிய மூன்று நலன்களையும், முக்தி நலன்களையும் வழங்குகிறார்கள்.

**ஆறுபடை வீடுடையோன் :** மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறாதாரங்களை ஆறுபடை வீடுகளாய் உடையவன்.

**மயில்வாகனன் :** மயில் - ஆணவம், யானை - கன்மம், ஆடு - மாயை இந்த மூன்றையும் அடக்கி வாகனமாய் கொண்டவன்.

தமிழ் என்றால் முருகன், முருகன் என்றால் தமிழ் இரண்டையும் பிரிக்க முடியாத அளவிற்கு இணைந்தே இருக்கும். உதாரணமாக 12 உயிரெழுத்து என்பது முருகனின் 12 தோள்களை குறிக்கும். 18 மெய்யெழுத்து என்பது முருகனின் 18 கண்கள் (முருகன் சிவனது நெற்றிப் பொறியிலிருந்து தோன்றியவர் என்பதால் இவரது ஒவ்வொரு முகத்திலும் இவருக்கும் நெற்றிக்கண் உண்டு) 6 இனை எழுத்து என்பது 6 முகங்களை குறிக்கும். ஃ என்ற ஆயுத எழுத்து வேலை குறிக்கும். இந்த வேலை வணங்குவதையே வேலையாக கொண்டால் வாழ்வில் சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும்.

**பாம்பன் சுவாமிகள் விளக்கம் :**

ஓம் சரவண பவ - பரமாத்ம வடிவம் சித்திக்கும்
ஐம் சரவண பவ - வாக்கு வன்மை சித்திக்கும்
சௌ சரவண பவ - உடல் வன்மை சிறக்கும்
க்லீம் சரவண பவ - உலகம் தன் வயமாகும்
ஸ்ரீம் சரவண பவ - செல்வம் சிறக்கும்

# "விளக்கு எரிந்த வீடு வீணாய் போகாது"


"விளக்கு எரிந்த வீடு வீணாய் போகாது" என்று ஒரு பழமொழி உள்ளது. நாம் வீட்டிலும், கோவிலிலும் ஏன் விளக்கேற்றுகிறோம் தெரியுமா?

தீபத்தின் சுடருக்கு தன்னை சுற்றி தேவையற்ற கதிர்களை (நெகடிவ் எனர்ஜி) ஈர்க்கும் சக்தி உண்டு. அவ்வாறு ஈர்க்கும்போது நம்மை சுற்றி பாசிடிவ் எனர்ஜி அதிகரிக்கும். நம் சுற்றுப்புறம் தெளிவாகவும் பலத்தோடும் காணப்படும்.

இரண்டு நாள் வீட்டில் விளக்கேற்றாமல் இருந்தால் வீடே மயானம் போல் தோன்றும். எல்லோருமே சோர்வாக இருப்பார்கள் இதுவே விளக்கேற்றுவதன் தத்துவம்.

நம் உடலில் இருக்கும் ஏழு சக்கரங்களில் மூலாதாரமும், சுவாதிஷ்டானமும் நல்லெண்ணெய் விளக்கு ஏற்றுவதால் தூய்மையடைகிறது.

அதேபோல மணிபூரகம், அனாஹதம் இரண்டும் நெய்விளக்கு ஏற்ற தூய்மை அடைந்து நற்பலன்களை அடைகிறது.



நம் உடலில் இருக்கும் நாடிகளில் சூரியநாடி, சந்திரநாடி, சுஷம்னாநாடி ஆகியவை மிக முக்கியமாக கருதப்படுகிறது.

சூரியநாடி நல்ல சக்தியையும், வெப்பத்தையும் தருகிறது. சந்திரநாடி குளுமையை தருகிறது.

சுஷம்னாநாடி அந்த பரம்பொருளுடன் சம்பந்தப்பட்டு ஆன்மீக பாதையை வகுக்கிறது. நல்லெண்ணெய் விளக்கு ஏற்ற சூரியநாடி சுறுசுறுப்படைகிறது. நெய்விளக்கு சுஷம்னாநாடியை தூண்டிவிட உதவுகிறது.

பொதுவாக நெய்தீபம் சகலவித சுகங்களையும், வீட்டிற்கு நலன்களையும் தருகிறது. திருவிளக்கு எப்போது வேண்டுமானாலும் ஏற்றலாம் இதற்கு தடையேதும் இல்லை. ஆனால் பொதுவாக மாலை 6.30க்கு ஏற்றுவதே நமது மரபு. இதை கருக்கல் நேரம் என்பர். சூரியன் மறைந்ததும் சில விஷசக்திகள் சுற்றுசூழலில் பரவி வீட்டிற்குள்ளும் வர வாய்பிருக்கிறது. சூரிய ஒளியின் முன் அந்த விஷசக்திகள் அடிபட்டுபோகும். எனவே அந்நேரத்தில் விளக்கேற்றுகின்றோம் என்பது அறிவியல் உண்மை.

குறிப்பு : - மெழுகுவர்த்தி ஏற்றக்கூடாது. இதன் புகை உடல் நலத்தை கெடுக்கும். ஆஸ்துமா, மார்பு புற்றுநோய் இவைகளுக்கு மெழுகுவர்த்திதான் தாய். மண்ணெண்ணெய் விளக்கும் வேண்டாம். வீட்டில் பெண் குழந்தைகள் இருந்தால் அவர்களை தினசரி விளக்கேற்றும்படி கேட்டுக்கொள்ளவேண்டும். இப்படி செய்வதால் விளக்கேற்றிய வீடு வீண் போகாது.

# நார்த்தாமலை மாரியம்மன்

புதுகோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டத்தில் மாரியம்மன் அருள்பாலிக்கும் நார்த்தாமலை ஆலயம் உள்ளது. இது பழமையானது. இந்த பகுதிகள் பல்லவர் சோழர்களிடம் மாறி, மாறி வந்தவை. பின்னாளில் புதுகோட்டை சமஸ்தானத்துக்கு வந்தது. அவ்வகையில் புதுகோட்டை சமஸ்தானத்தின் மிக பிரதானமான ஆலயமாக விளங்கியது.

இந்த இடத்தை சுற்றி மேலமலை, கோட்டைமலை, கடம்பர்மலை, பறையர்மலை, உவக்கன்மலை, ஆளுருட்டிமலை, பொம்மாடிமலை, பொன்மலை, மண்மலை என ஏகப்பட்ட மலைகள் உண்டு.

ராஜராஜசோழன் தஞ்சாவூர் பெரிய கோவிலை கட்டும்போது இங்கிருந்து பாறைகளை வெட்டியிருக்கலாம் எனும் அனுமானம் உண்டு. இந்த மலை குன்றுகளெல்லாம் அனுமன் இலங்கைக்கு சுமந்து சென்ற சஞ்சீவ பர்வதத்தில் இருந்து விழுந்தவை. இதனால் இன்றும் அம்மலைகள் சிலவற்றில் அபூர்வ மூலிகைகள் உண்டு. சித்தர்கள் பலர் சுற்றித்திரிந்த மலைகள் இவை.

இந்த மலைகளில் ஒன்றுதான் நார்த்தாமலை. அனார்த்தம் எனும் சொல்லுக்கு பலனில்லாதது அழிவு என பொருள். நார்த்தம் எனும் பெயருக்கு ஆக்கசக்தி, நல்ல சக்தி என பொருள். இது ஒரு கோணம், இம்மலை அப்பொழுது இருந்தே பிரபஞ்ச சக்தியினை ஈர்த்து கொடுக்கும் மலையாகத்தான் இருந்திருக்கின்றது. இங்கு நாரதர் தவமிருந்தார் அதனால் நாரதமலையாகி நார்த்தாமலை என்றானது எனும் பெயரும் உண்டு.

நகரத்தார் எனும் செட்டியார்களின் வணிக வழியில் முக்கிய இடம் இது. இதனால் நகரத்தார்மலை என்பது நார்த்தாமலை என மருவியது எனும் கோணமும் உண்டு. இப்படியான நார்த்தா மலையில் அம்மன் குடிகொண்ட வரலாறு சிலிர்ப்பானது.

இந்துகோவில்களுக்கு ஆபத்து வரும்போதெல்லாம் இந்துக்கள் சாமி சிலைகளை புதைத்து வைப்பது வழக்கம். தமிழகமெங்கும் இப்போதும் பல இடங்களில் சிலைகள் கிடைத்து கொண்டிருப்பதெல்லாம் அப்படி ஒரு கொடுங்காலத்தில் பாதுகாப்பாக புதைக்கப்பட்டவை. இப்படி இந்த அம்மன் சிலையும் புதைக்கப்பட்டிருந்தது.

அவள் காலம் பார்த்து மீண்டாள். மதுரையில் சுல்தானிய ஆட்சி அகற்றப்பட்டு நாயக்கர் கால ஆட்சி வந்தபோது அவள் தன்னை வெளிப்படுத்தினாள். நார்த்தாமலையில் இருந்து சில கல் தொலைவிலுள்ள கீழகுறிச்சி அருகே அவள் தன்னை வெளிபடுத்தினாள்.

அது கொள்ளை நோய்கள் அதிகரித்த காலம். கோவில் குருக்கள் ஒருவர் இதுபற்றி மனதில் பெரும் வருத்தம் கொண்டிருந்தார்.



அங்கிருக்கும் அம்மன் கோவிலில் அனுதினமும் அவர் மக்களுக்காக வேண்டி கொண்டே இருந்தார். அந்நேரம் இந்த குருக்கள் வயலுக்கு செல்லும் போது ஒரு வரப்பில் தொடர்ந்து தடுக்கி விழுந்தார். முதல் இருமுறை அவர் அதனை பெரிதாக கருதவில்லை. மூன்றாம் முறை விழும்போது அவருக்குள் ஏதோ ஒரு உணர்வு ஏற்பட்டது. உடனே அதனை தோண்டிபார்க்க சொன்னார். ஆட்கள் தோண்டினார்கள். அப்போது மிக அழகான அம்மன் சிலை வெளிப்பட்டது. அனைவரும் பரவசத்தில் விழுந்து வணங்கினார்கள்.

குருக்கள் அங்கே சிலையினை குளிப்பாட்டி பூஜைகள் செய்தார். பின் அந்த சிலையினை எங்கே வைப்பது என்பதில் ஆளாளுக்கு குழம்பினார்கள். இருக்கும் பழைய ஆலயத்தில் வைப்பதா? புதிய கோவில் கட்டி வைப்பதா, இல்லை இந்த இடத்திலே கோவில்கட்டுவதா என குழம்பினார்கள். அப்போது அம்மனின் வாக்கு அசரீரியாக குருக்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே கேட்டது.

"என்னை நார்த்தாமலையின் அடிவாரத்தில் இருக்கும் சிவன் கோவில் அருகே அமர்த்துங்கள். நான் எல்லா நோய்களில் இருந்தும் உங்களுக்கு பாதுகாவல் தருவேன்" என்றார். அதன்படி மக்கள் அப்பகுதி அரசனை நாடினர். அரசனும் வந்து அம்மனை தரிசித்து நார்த்தாமலை சிவன் கோவில் அருகே ஒரு ஆலயம் அமைத்து அன்னையினை அமர்த்தினான்.

மக்கள் அன்னையினை வணங்க தொடங்கிய நேரம் நோய்களெல்லாம் மறைந்தன. குறிப்பாக அம்மை நோய் போன்றவை உடனே மறைய, மறைய அன்னை முத்துமாரி என்றானாள். இது 14ம் நூற்றாண்டில் நடந்த காட்சி என்கின்றது சில வரலாறுகள். அதன்பின் அவள் மிக மிக பிரசித்தியானாள் எங்கிருந்தெல்லாமோ வந்து பக்தர்கள் வணங்கினார்கள். அவளும் அவர்கள் குறை எல்லாம் தீர்த்துவைத்து தன் சக்தியினை காட்டியபடி நின்றாள்.

இந்த ஆலயத்திற்கு மிகபெரிய திருப்புமுனை கொடுத்தவள், அதன் பெருமையினை அகிலமெல்லாம் பிரகாசிக்க செய்தவள் ஒரு பெண். அவளாலே இந்த ஆலயம் மிக, மிக பிரசித்தியானது. அவளுக்கும் அம்மனுக்கும் ஏதோ பூர்வ

ஜென்ம தொடர்பு. அவளை இப்பிறப்பில் சரியாக பிடித்து கொண்ட அன்னை அவளை கொண்டே தன் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தாள். அவள் பெயர் மலையம்மாள்.

அவள் பிறந்த குடும்பம் திருவண் ஜமீன் அந்தஸ்தில் இருந்தது. ஆனால் அவளுக்கு சிறுவயதிலே அம்மை போட்டது. அவள் நிலமை மிக மிக மோசமானது குடும்பத்தார் என்ன செய்தும் பலனில்லை. கடைசியில் இந்த ஆலயம் பற்றி அறிந்து அவளை இங்கு அழைத்து வந்தனர். அவள் நிலமை மிக மோசமாக இருந்தது. உடலெல்லாம் கொப்பளமாக தலை தொங்கி கண் திறக்க கூட முடியாமல் பேசமுடியாமல் வாழ்வில் இறுதி நொடியில் இருப்பவளை போல் அவள் சுருங்கி கிடந்தாள்.

இங்கு அம்மன் சன்னதியில் அவளை இட்டு சொன்னார்கள் "இவள் பிழைத்தால் உனக்கே தருகின்றோம்" என்றார்கள். ஒரு சில நிமிடங்களில் அவள் நோய் தீர்ந்தது. குடும்பத்தார் அதிசயித்தனர். அந்த சிறுவயதில் அந்த மலையம்மாளும் இவளே என் தாய் என உரிமையாய் அவள் அருகில் அமர்ந்து கொண்டாள். அவளில் தன் சக்தியினை இறக்கினாள் மாரியம்மன். அதன் பின் அவள் அங்கு நடமாடும் அம்மனாக அமர்ந்தாள்.

அவளிடம் குங்குமம் வாங்கினால் நோய் தீர்ந்தது, அவள் அருள்வாக்கு சொன்னால் அது அப்படியே நடந்தது. அவளை தேடி தேடி பெரும் கூட்டம் வர ஆரம்பித்தது. ஒரு மனிதன் தன் உயிரை காக்க எதையும் இழப்பான், கொடுப்பான் அப்படி அவள் முன்னால் பணமும், தங்கமுமாக கொட்டினார்கள். அவள் தனக்காக ஒரு காசு எடுப்பதில்லை. அம்மன் கோவிலில் கூழும், கஞ்சியும் குடித்து வாழ்ந்து கொண்டிருந்தாள்.

மஞ்சள் ஆடை மட்டும் உடுத்தியிருந்தாள், ஒரு குடிசையில் தான் தங்கியிருந்தாள். அந்த தவத்தில்தான் இந்த தலத்தை விரிவுபடுத்தினாள். பெரிய பெரிய சுவர்கள் கோபுரங்கள் என தனி ஒருத்தியாக முடித்து காட்டினாள். சுமார் 70 ஆண்டுகாலம் அந்த கோவிலில் அம்மனின் மகளாக கர்மம் கழித்தவள் அங்கேயே சமாதியும் கொண்டாள். ஆலயத்திலிருந்து சற்று தள்ளி அவளின் சமாதி சக்தியோடு அமைந்திருக்கின்றது.

அவள் பிறந்த வேட்டமலையில் இருந்து அவள் சாதிசனமும் மக்களும் வந்து இப்போதும் அவளுக்கு பூஜை செய்வது உண்டு. தனக்கென வாழாமல் திருமணம் செய்யாமல் ஒரு சித்தராக வாழ்ந்து, அம்மனின் அருள் பெற்றவளாக வாழ்ந்த அந்த மலையாள்தான் இப்போதும் அன்னையோடு நின்று அங்கு அருள்புரிகின்றாள்.

இந்த கோவில் கிழக்குப் பார்த்தபடி ஐந்து நிலை ராஜகோபுரத்துடன் கம்பீரமாக கனிவே உருவான பார்வையுடன் ஆசி வழங்குகின்றாள் அந்த முத்துமாரியம்மன். கட்கம், கபாலம், டமருகம் மற்றும் சக்திஹஸ்தம் கொண்டு நான்கு கரங்களுடன் அரவணைத்துக் காக்கிறாள் அம்மன். இந்த ஆலயத்தின் மிக முக்கியமான சிறப்பு இங்கு அம்மன் சன்னதியில் வடபுறத்து சுவற்றில் கல்லினாளான முருகன் எந்திரம் பதிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் அற்புதமான சக்தி கொண்டது. சித்தர் ஒருவரால் இது ஸ்தாபிக்கப்பட்டது. மலையம்மாள் காலத்துக்கு முன்பிலிருந்தே இருந்தது என்கின்றது செய்திகள். இதனாலே முருகனுக்கு செய்யும் காவடி வழிபாடு உள்ளிட்ட எல்லா வழிபாடுகளும் இங்கும் அப்படியே உண்டு.

முருகபெருமானுக்குரிய ஹஸ்தத்துடன் அம்மன் காட்சி தரும் அதிசயம் கொண்டது இக்கோவில். சற்று மேலே இந்த மலையில் ஒரு சுனை உண்டு. அது தலையருவி சிங்கம் என அழைக்கப்படும். அங்கு ஒரு லிங்கம் உண்டு அவருக்கு ஜிரஹரேஸ்வரர் என பெயர், அங்கும் பக்தர்கள் வழிபடுவார்கள். சித்தர் கால லிங்கம் இது. புதுகோட்டை மாவட்டத்தின் தலைமை அம்மன் இவள் எனுமளவு மாபெரும் இடம் பிடித்து தனக்கென ஒரு ஆட்சியினை அவள் செய்துகொண்டிருக்கின்றாள்.

---

# "ஒருநாள் நீ காத்திருப்பே பார்"

....... பெரியவா

பெரியவர் திண்டிவனத்தில் பள்ளி மாணவனாக இருந்த தருணத்தில் அவர் வசித்த தெருவில் ஒரு பாட்டி முறுக்கு செய்து விற்று வந்தாள். பாட்டியின் வயிற்றுப்பாடே அதில் தான் இருந்தது. பாட்டியின் கைப்பக்குவம் அலாதியானது. பெரியவர் அப்போது அப்பாவிடம் முறுக்கு சாப்பிட அரையணா பெற்றுச் சென்று அதில் முறுக்கு வாங்கிச் சாப்பிடுவதோடு தன் நண்பர்களையும் வாங்கச் சொல்லி ஊக்கப்படுத்துவார். இதனால் பாட்டிக்கு வியாபாரம் நன்கு நடந்தது.



ஒருநாள் பெரியவர் பாட்டியிடம் பெருமையாக தன்னால்தான் பாட்டிக்கு நல்ல வியாபாரம் என்று கூற பாட்டியும் ஒப்புக்கொண்டு சிரித்தாள். அப்படியே, "என் கைப்பக்குவமும் எல்லாரும் வாங்கிச் சாப்பிட காரணம்" என்றாள். "அப்ப நான் காரணம் இல்லையா?" என்று கேட்கவும் பாட்டி, "நீயும் ஒரு காரணம். இப்ப அதுக்கு என்னடா வந்தது?" என்று கேட்டாள்.

"அதுக்கென்ன வந்ததா? ஒரு தடவையாவது ஒரு முறுக்கையாவது நீ எனக்கு சும்மா தந்துருக்கியா?" என்று பாட்டியிடம் பெரியவரும் சளைக்காமல் கூறி, "அப்புறம் நான் நிஜமாலுமே வாங்க மாட்டேன் தெரிஞ்சுக்கோ" என்றார்.

"சரிதான் போடா ... நீ வாங்கலேன்னுதான் நான் அழறேனாக்கும்" என்றாள் பாட்டியும்.

"பாட்டி யோசித்து பேசு.."

"இதுல யோசிக்க என்ன இருக்கு? நீ பெரிய கலெக்டரு பாரு..."

"அப்ப கலெக்டரா இருந்தாதான் மதிப்பியா?"

"நான் கலெக்டரையே கூட என்னை மதிச்சாதாண்டா மதிப்பேன்".

"சரி... இனி நான் உன் கடைல முறுக்கு வாங்கவே மாட்டேன்".

"ரெம்ப முறுக்கிக்காதே ... நீ வரணும்னு நான் ஒண்ணும் இங்க பூரண கும்பத்தோட காத்திருக்கல..." பாட்டி அப்படி சொல்லவும் பெரியவருக்குள் ஒரு இனம் தெரியாத வேகம்.

"ஒரு நாள் காத்திருப்பே பார் ..." என்றவராக விடை பெற்றார்.

பாட்டியும் அதை அன்று விளையாட்டாகத்தான் எடுத்துக் கொண்டாள்.

காலம் சில வருடங்களிலேயே பாட்டியை பூர்ணகும்பம் எடுக்க வைத்துவிட்டது. ஒரு மாடாதிபதியாக காசியாத்திரை எல்லாம் முடிந்து கும்பகோணம் நோக்கி பெரியவர் திரும்பிய சமயம் திண்டிவனம் குறுக்கிட்டது.

தான் ஓடியாடித் திரிந்த ஊர்... பள்ளிப் பிராயத்தில் எவ்வளவோ நண்பர்கள், ஆசிரியர்கள் எல்லேரும் பெரியவர் பல்லக்கில் அமர்ந்து வருவதைப் பார்த்தபடி இருக்க பெரியவாளுக்குள்ளும் அந்த நாள் ஞாபகங்கள்.

பல்லக்கை விட்டு இறங்கி நடந்தே வந்தவராய் நண்பர்களை எல்லாம் சந்தித்தார். எல்லாருடைய பெயரையும் ஞாபகம் வைத்திருந்து சொல்லி அழைத்தார்.

பெரியவர் படித்தது ஒரு கிறிஸ்தவப் பள்ளியில். அதன் ஆசிரியர்கள் சிலர் பாதிரியார்கள். அவர்களும் பெரியவரை காண வந்தனர். அவர்களுக்கெல்லாம் தங்களிடம் பயின்ற மாணவன் "ஜெகத்குரு"வாக திகழ்கிறான் என்பதில் பெருமை.

அப்படியே தான் வசித்த தெருப்பக்கமும் பெரியவர் சென்றார்.

தெருவே விழாக்கோலம் பூண்டிருந்தது. வாசலில் கோலம் போட்டு எல்லோரும் பயபக்தியுடன் காத்திருந்தனர். இதில் தாய், தந்தை, சகோதரர்களுக்கு மட்டும் இடமில்லை. சன்யாச தர்மப்படி சன்யாசியாகிட்ட நிலையிலேயே குடும்ப உறவுகள் நீங்கி விடுகின்றன. உறவோடு இருந்தவர்களுக்கும் ஜெகத் குருவாகி விடுகிறார். அவர்களும் குரு என்றே சொல்ல வேண்டும்.

அப்போது பாட்டி வீட்டை கடந்த போது அப்படியே வாசலில் நின்று உள்ளே பார்வையை விட்டு, "பாட்டி எங்கே?" என்று கேட்டார். பாட்டியை அழைக்க சிலர் உள்ளே சென்றனர்.

பாட்டியோ பூர்ணகும்பம் சகிதம் தயக்கத்தோடு உள்ளேயே முடங்கியிருந்தாள் காரணம் அன்று பேசிய பேச்சு. அன்று "ஒருநாள் நீ காத்திருப்பே பார்" என்று பெரியவர் சொன்னதும் பலித்துவிட்டது.

பூர்ணகும்பத்துடன் பாட்டி தயங்கித் தயங்கி வெளியே வந்தாள். பெரியவரை நேருக்குநேர் பார்க்க அவளுக்கு கூச்சமாக இருந்தது.

பெரியவரிடமோ புன்னகை, பூர்ணகும்பத்தை வாங்கிக்கொண்டே "பாட்டி சவுக்கியமா இருக்கியா?" என்று பழசைக்கிளராமல் கேட்கவும், பாட்டி "சர்வேஸ்வரா" என்று காலில் விழுந்தாள்.


அதன்பின் பாட்டிக்கு விசேஷமான ஆசிகளை வழங்கியதோடு "பாட்டி முறுக்குன்னா எனக்கு உசுரு. பாட்டி கைப்பக்குவம் யாருக்கும் வராது" என்று பாராட்டி மகிழ்ந்தார்.

# பழைமையான சிவலிங்கம்

உலகின் மிகப் பழைமையான சிவலிங்கம் "ஹரப்பா" வில் உள்ளது. அதற்கு அடுத்த பழமையான சிவலிங்கங்கள் தமிழகத்தில் மட்டுமே உள்ளன. அதில் இரண்டு மிகப் பழமையானவை. ஒன்று காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் ஆலயத்தில் உள்ள சிவலிங்கம்.

அடுத்து "குடிமல்லம்" என்ற இடத்தில் உள்ள சிவலிங்கம், பழைய எல்லைப்படி இது தமிழகம். இன்றைய எல்லைப்படி இது ஆந்திரா. ஆம் ரேணிகுண்டாவிற்கு அருகில் உள்ன ஊர். இந்த குடிமல்லம் சிவன் கோயில் ASI (Archeological Survey of India) -ன் கட்டுப்பாட்டில் உள்ளது. உலகில் சிவலிங்கத்தை ஆராய்ச்சி செய்பவர்களின் கருத்துப்படி இதுவே மிகவும் பழமையான சிவலிங்கம்.

ஆன்மீகத்தில் முன்னேற விரும்பும் ஒவ்வொரு மனிதனும் நிச்சயம் காண வேண்டிய சிவஸ்தலம். உண்மை மிகவும் சாதாரணமாக இருக்கும் என்பதற்கு இந்த ஊர் சிவலிங்கம் ஒரு உதாரணம். மக்கள் யாரும் இந்த ஊருக்கு வருவதில்லை. நன்கு விஷயம் அறிந்தவர்கள் மட்டுமே இந்த ஊர் கோயிலில் உள்ள சிவலிங்கத்தை காண வருகின்றனர்.



உண்மை ஆன்மீகத்திற்கான திறவுகோல் இந்த சிவலிங்கம். உண்மையில் தேடுபவர்களுக்கு மட்டுமே உண்மைப் பொருள் விளங்கும். இத்தனை முக்கியமான சிவன் கோயிலுக்கு மக்கள் வருவதே இல்லை. ஆனால் ரேணிகுண்டாவை தாண்டித்தான் லட்சக்கணக்கானோர் திருப்பதிக்கு செல்கின்றனர். அப்படி என்ன இந்த சிவலிங்கத்தில் உள்ளது என்பதை காண ஆன்மீகவாதிகள் சென்று முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

ஆன்மீக முன்னேற்றம் பெற விரும்பும் ஒவ்வொருவரும் வாழ்கையில் ஒரு முறையாவது அந்த சிவலிங்கத்தை நேரில் சென்று தரிசனம் செய்ய தவறாதீர்கள்.

# KRISHNA DELISH COFFEE

GREAT TASTE




## எங்களிடம் தரமான காபி
## கொட்டை அரைத்து தரப்படும்
## 1 கிலோ காபி பவுடர்
## ரூ 920 மட்டுமே

* Condition Apply

## நம்ம ஆத்து காபி
## FILTER COFFEE RS. 20 only

COFFEE POWDER
DOOR DELIVERY FREE
ALSO AVAILABLE

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore
Ganapathy's
CELEBRATING
83 Years
ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
கணபதிஸ்
ஸ்தாபிதம் 1942

# வெண்ணெய் & நெய்

## பாரம்பரியமாக 1942 முதல்

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com
ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com